From-39

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 51/2020

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : Ramesh Raja | Father/Husband Name | : Subramaniyan |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 18.08.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 18th day of August 2021.

முதல் விசாரணை:

நான் கீழவளவில் வசிக்கிறேன். விவசாய வேலை செய்கிறேன். ஆஜர் எதிரி மாயக்கண்ணனை தெரியும் . 29.08.2018-ம் தேதி இரவு 10.30-லிருந்து 11.00 மணியளவில் தனலெட்சுமி என்பவர் வீட்டில் போர் போட்டதற்காக பணத்தை எண்ணிக்கொடுக்க சொல்லி தனலெட்சுமி என்பவர் அழைத்ததன்பேரில் நான் அவர்கள் வீட்டிற்கு சென்று நானும் போர் வண்டி ஓட்டுனரான ராதாகிருஸ்ணன் என்பவரும் செலவு தொகையை கணக்கு பார்த்துக்கொண்டிருந்தோம். அப்போது ஆஜர் எதிரி அங்கு வந்து தேவுடியா மகனே உன்னை கொல்லாமல் விடுறது இல்லடா என்று சொல்லி உருட்டுக்கட்டையால் எனது பின்பக்க தலையில் ஓங்கி அடித்து ரத்தக்காயப்படுத்தினார். ( சாட்சி அவரது பின் தலையில் தையல் போடப்பட்ட காயத்தழும்பினை காட்டினார்) அப்போது அருகில் இருந்தவர்கள் விலக்கி விட்டபோது எதிரி என்னை பார்த்து இப்போது தப்பிவிட்டேன் என்று நினைக்கிறாயா உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார். பின்னர் நான் மயக்கமாகிவிட்டேன்.அருகில் இருந்தவர்கள் என்னை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள். மறுநாள் காலையில் கீழவளவு சார்பு ஆய்வாளர் கோபிநாத் அவர்கள் மருத்துவமனைக்கு வந்து என்னிடம் விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கினார். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் சொல்ல சொல்ல சார்பு ஆய்வாளர் எழுதி என்னிடம் படித்துக்காட்டிய பின்னர் நான் கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

ஆஜர் எதிரி எனக்கு என்ன உறவு என்றால் மூன்றாவது பங்காளி. எனக்கும் ஆஜர் எதிரிக்கும் முன்பகை உள்ளதா என்றால் இல்லை. சம்பவத்தின்போது நான் எதிரியுடன் பேசுவேனா என்றால் சம்பவத்திற்கு ஒருவாரத்திற்கு முன்பு வரை அவர் என்னுடன் பேசுவார். அவர் சகோதரர்களுக்குள் சொத்து பிரச்சினை ஏற்பட்டதால் என்னிடம் பேசமாட்டார். மேற்படி விசயத்தை நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் எதிரியும் நானும் சம்பவத்திற்கு முன்பு இரண்டு வருடங்களாகவே பேசிக்கொள்ளமாட்டோம் என்றால் சரியல்ல. சி.சி.234/2018 என்ற வழக்கு இந்த நீதிமன்றத்தில் நான் எதிரி மீது கொடுத்து அது நிலுவையில் உள்ளதா என்றால் இந்த வழக்கினை திரும்ப பெறக்கோரி என்னை மிரட்டியதால் அந்த வழக்கினை கொடுத்தேன். வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கின்றேன் ஏனென்றால் இந்த வழக்கு 51/2020 அந்த வழக்கு எண்.234/2018 என்றால் நான் இந்த வழக்கினை தான் முதலில் கொடுத்தேன். அந்த வழக்கில் நாங்கள் ஏற்கனவே சாட்சியம் அளித்துவிட்டோம் என்றால் எந்த வழக்கிற்காக சாட்சியம் சொல்ல அழைத்தார்களோ அந்த வழக்கிற்காக வந்தோம். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எதிரி என்னை உருட்டு கட்டையால் தாக்கவில்லை என்றாலும் நான்தான் எதிரியை தாக்குவதற்காக அவரது வீட்டிற்கு சென்றபோது கல் தடுமாறி கீழே விழுந்ததில் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரி என்னை கொலை மிரட்டல் விடுக்கவில்லை நான்தான் அவரை மிரட்டினேன் என்றால் சரியல்ல. நான் போர் போட்டதுக்காக கணக்கு பார்க்க போனதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பணபலம் அரசியல் பலம் உள்ள நபர் என்பதால் எதிரி மீது பொய்யாக பல புகார்களை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 51/2020

Deposition of witness for: PW - 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Dhanalakshmi | Father/Husband Name | : | Thamotharan |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | |
| Date | : | 18.08.2021 | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் கீழவளவில் வசிக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். அ.சா.1-ஐ தெரியும். ஆஜர் எதிரி மாயக்கண்ணனை தெரியும். சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக இரவு சுமார் 10.30-லிருந்து 10.45 மணியளவில் எங்கள் வீட்டில் போர் போட்டதற்காக அ.சா.1 பணத்தை எண்ணிக்கொடுக்க கணக்கு பார்த்துக்கொண்டிருந்தார். அப்போது ஆஜர் எதிரி அங்கு வந்து தேவுடியா மகனே என்று சொல்லி உருட்டுக்கட்டையால் அ.சா.1-ன் பின்பக்க தலையில் ஓங்கி அடித்து ரத்தக்காயப்படுத்தினார். எதிரி அ.சா.1-ஐ பார்த்து கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார். பின்னர் அ.சா.1 மயக்கமாகிவிட்டார். பின்னர் அவரை ஒரு காரில் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

அ.சா.1 எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது அக்கா மகன். உடன் பிறந்த அக்கா மகனா என்றால் சித்தப்பா மகளின் மகன். சாட்சி சொல்ல நான் எப்படி வந்தேன் என்றால் கோர்ட்டில் இருந்து எனக்கு சம்மன் வந்தது. சம்பவம் நடந்த தேதி வருடம் எனக்கு தெரியுமா என்றால் 3 வருடங்களுக்கு முன்பாக நடந்தது. எனக்கு படிப்பறிவு இல்லாததால் தேதி என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலாது. சம்பவம் எங்கு நடந்தது என்றால் என் வீட்டில் தான் நடந்தது. போர் போட்டதற்கு ஆதாரம் என்னிடம் உள்ளதா என்றால் என்னிடம் ரசீது எதுவும் கொடுக்கவில்லை. சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், முதல் விசாரணையில் நான் சொன்னது எதுவும் நடக்கவில்லை என்றாலும் போர் போட்டிருந்தால் ரசீது தாக்கல்

செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. அ.சா.1 எனது அக்கா மகன் என்பதால் அவருக்கு சாதகமாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 தானாக கீழே விழுந்தார் எதிரியால் எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 எதிரியின் வீட்டிற்கு எதிரியை தாக்க சென்றபோது அவரது வீட்டின் முன்பு கீழே விழுந்ததில் அவருக்கு காயம் ஏற்பட்டது என்றால் ˙ சரியல்ல. நானும் அச.ா.1-ம் தான் எதிரிக்கு கொலைமிரட்டல் விடுத்தோம் என்றால் சரியல்ல. நானும் அ.சா.1-ம் எதிரி மீது பல பொய் புகார்களை கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 51/2020

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | : Andal | Father/Husband Name | : Murugan |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 18.08.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் கீழவளவில் வசிக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். அ.சா.1-ஐ தெரியும். ஆஜர் எதிரி மாயக்கண்ணனை தெரியும். 3 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் இரவு 10.45 மணியளவில் எங்கள் வீட்டின் முன்பாக ஆஜர் எதிரி அ.சா.1-ஐ தேவுடியா மகனே உன்னை கொல்லாமல் விடமாட்டேன்டா என்றுசொல்லி உருட்டுக்கட்டையால் அ.சா.1ன் பின்பக்க தலையில் இரத்தக்காயம் ஏற்பட்டு ( 8 தையல் போடப்பட்டது) பின்னர் நாங்கள் அருகிலிருந்தவர்கள் விலக்கிவிட்டபோது எதிரி உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று அ.சா.1ஐ பார்த்து மிரட்டிவிட்டுச்சென்றார். பின்னர் அ.சா.1ஐ மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

என் வீட்டிற்கும் சம்பவம் நடந்த வீட்டிற்கும் உள்ள தூரம் எவ்வளவு என்றால் 30 அடி இருக்கும். இரவு 10.45 மணிக்கு நான் தூங்காமல் இருந்தேனா என்றால் கடைக்கு வேலைக்கு சென்றுவிட்டு 9.45 மணிக்குதான் வீடு திரும்பினேன். வீட்டு நடையில் உட்கார்ந்திருந்தேன். சத்தம்கேட்டுதான் நான் வந்து பார்த்தேன் என்றால் எதிரி அ.சா.1ஐ அடித்ததை பார்த்தவுடன் நாங்கள் ஓடிச்சென்று பார்த்தோம். அ.சா.1ஐ எதிரி எதற்காக அடித்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 எனக்கு என்ன உறவுமுறை வேண்டும் என்றால் தூரத்து உறவினர். அ.சா.1க்கு ஆதரவாக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1க்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 51/2020

Deposition of witness for: PW - 4

| | | | |
|---|---|---|---|
| Name | : Thavapriya | Father/Husband Name | : Sathish |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 18.08.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் கீழவளவில் வசிக்கிறேன். வீட்டுக்குடித்தனம் செய்கிறேன். அ.சா.1-ஐ தெரியும். ஆஜர் எதிரி மாயக்கண்ணனை தெரியும். 3 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் இரவு 10.40 மணியளவில் எங்கள் வீட்டின் அருகே என் அம்மா வீட்டில் போர் போட்டுக்கொண்டிருந்தார்கள். அ.சா.1 09.45 மணியளவில் எங்கள் அம்மா வீட்டிற்கு வந்தார். கணக்கு பார்த்துக்கொண்டிருந்தபோது சுமார் 10.40 மணியளவில் நாங்களும் அருகில்தான் இருந்தோம். நாங்கள் போர் போடுவதை பார்த்துக்கொண்டிருந்தோம். போர் போட்ட அண்ணன் ராதா என்பவருடன் அ.சா.1 கணக்கு பார்த்துக்கொண்டிருந்தார். அருகில் ஒரு சந்து இருந்தது. அந்த சந்திலிருந்து ஆஜர் எதிரி அ.சா.1-க்கு பின்பக்கமாக வந்து தேவடியா மகனே என்று சொல்லி உருட்டுக்கட்டையால் அ.சா.1-ன் பின்புற தலையில் ஓங்கி அடித்துவிட்டார். பிறகு அவர்களை நாங்கள் விலக்கிவிட்டபோது எதிரி அ.சா.1-ஐ பார்த்து எதிரி உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டுச்சென்றார். பின்னர் அ.சா.1ஐ மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

நான் முதல் விசாரணையில் சொன்ன சம்பவம் அனைத்தையும் நேரடியாக பார்த்தேனா என்றால் பார்த்தேன். வீட்டிற்கு உதவி செய்ய வந்தவரை தாக்கும்போது நாங்கள் எப்படி தடுக்காமல் இருந்தோம் என்றால் நாங்கள் எதிர்பார்க்காமல் இருந்த தருணத்தில் பின்னால் வந்து எதிரி தாக்கியதால் எங்களால் தடுகக் இயலவில்லை. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நடந்திருந்தால் நாங்கள்

தடுத்திருப்போம் என்றாலும் எங்களிடம் சொல்லிவிட்டு தாக்கியிருந்தால் நாங்கள் தடுத்திருப்போம் சொல்லாமல் திடீரென்று வந்து தாக்கியதால் எங்களால் தடுக்கமுடியவில்லை. அ.சா.1 என் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அ.சா.1ஐவிட எதிரிதான் நெருங்கிய உறவினா சொந்த சித்தப்பா முறை. எதிரியுடன் சம்பவசமயத்தில் நாங்கள் பேசிக்கொள்வோமா என்றால் ரொம்ப நெருக்கமாக பேசவில்லை என்றாலும் பேசிக்கொள்வோம். அ.சா.1ஐ எதற்காக அழைத்து போர்போட்ட கணக்கை பார்த்தோம் என்றால் எங்களுக்கு அதைப்பற்றி விவரம் தெரியாததால் அவரை வைத்து கணக்கு பார்த்தோம். நான்சொன்னதுபோல் போர் போடவுமில்லை என்றாலும், நான் சொல்வதுபொய் என்றாலும் கணக்கு பார்த்ததாகசொல்வதும் பொய் என்றாலும் அ.சா.1தான் எதிரியை அடித்ததில் அவருக்கு காயம் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. எதிரிக்கு எதிராக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 51/2020

Deposition of witness for: PW - 5

| | | | |
|---|---|---|---|
| Name | : Raja | Father/Husband Name | : Gandhi |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 25.08.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் வாச்சாம்பட்டியில் வசிக்கிறேன். சென்ட்ரிங்வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 2018ம் வருடம் ஒருநாள் கீழவளவிலுள்ள செட்டியார் தெருவில் வைத்து போலீசார் வந்து சம்பவ இடத்தை டார்ச்லைட் வைத்து பார்வையிட்டு விசாரித்துக்கொண்டிருந்தபோது அதை பார்த்துக்கொண்டிருந்த என்னிடம் சாட்சியாக கையெழுத்து கேட்டதன்பேரில் நானும் மற்றொரு நபரும் கையெழுத்து செய்தோம். அந்த நபரின் பெயர் எனக்கு தெரியவில்லை. பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சம்பவம்பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். நான் வெள்ளை பேப்பரில்தான் கையெழுத்து செய்தேனா என்றால் இல்லை, அதில் எழுதியிருந்ததை என்னிடம் படித்துக்காட்டிய பின்புதான் கையெழுத்து செய்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று தற்போது சொல்ல தெரியுமா என்றால் எனக்கு படிப்பறிவு இல்லாததால் எனக்கு நினைவில் இல்லை. சம்பவ இடம் காவல் நிலையத்திலிருந்து எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் ஒரு கிலோ மீட்டர் இருக்கும். சம்பவ இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் இடையே 100 மீட்டர்தான் இருக்கும் என்றால் எனக்கு அந்த கணக்கு சரியாக தெரியவில்லை. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 8ம் வகுப்புவரை படித்துள்ளேன். எத்தனை மணிக்கு கையெழுத்து வாங்கினார்கள் என்றால் இரவு 8 மணி இருக்கலாம், கான்கிரீட் போட்டு கையை கழுவிக்கொண்டிருந்தோம், அப்பொழுது போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து கையெழுத்து போட்டேன். போலீசாருக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.